# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடுவோரின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசால் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் இஞ்சினியர்கள், டெக்னீசியன்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், லேபர்கள் மற்றும் தொழில் திறன் பெற்ற தொழிலாளர்கள் பெருமளவில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். தற்பொழுது குவைத் நாட்டிலுள்ள ஓர் முன்னனி தனியார் நிறுவனத்திற்கு 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் 22 முதல் 40 வயதிற்குட்பட்ட லேபர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் லேபர்களுக்கு உணவு மற்றும் இருப்பிட வசதியும் சேர்த்து ரூ.33,000/- ஊதியத்துடன் இலவச டிக்கெட் மற்றும் குவைத் நாட்டின் சட்டத்திட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும். மேலும், தகுதியுள்ள லேபர்கள் மற்றும் இயந்திரம் இயக்குபவர்கள் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத்துடன் 20.03.2017 அன்று காலை 09.00 மணியளவில் **அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் சென்னை -32 அலுவலகத்தில்** நேர்முக தேர்வில் கலந்துகொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு 044-22505886, 044-22502267 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது www.omcmampower.com என்ற நிறுவன வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம் என இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அவர்கள் தெரிவித்துள்ளார்.